1499

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects*

# கிருஷிகன்

ஓர் மாதாந்திர விவசாயப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
20 MAR 1929
MADRAS

Vol. XI. புத்தகம் 11 | 1929ம் ௵ மார்ச்சு 14௳ விபவ ௵ பங்குனி 1௳ | NO. XII. ஈதி. 12.

Contents — Page

A Request to our subscribers 276
Preparation of organic Manures Recent researches 276
A Plea for Causarina Cultivation 281
Sriman Rao Bahadur B. Viswanath 282
Preservation of fodder in under ground Pits 283
Correspondence 286
Almanack 301

பொருளடக்கம் — பக்கம்

சந்தா நேயர்களுக்கு அறிக்கை 275
இந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்களை தயாரித்தலில் சமீபத்தில் செய்திருக்கும் ஆராய்ச்சிகள் 276
சவுக்கு மரங்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்குக் காரணங்கள் 281
ஸ்ரீமான் ராவ்பஹதூர் பி. விஸ்வநாத் 282
கால்நடைத் தீவனத்தைப்பந்தோ செயதுகாப்பாற்றிவைத்தல் 283
கடிதம் 286
பஞ்சாங்கம் 301

**Editor RaoBahadur J Chelvaranga Raju**
'Jaganatha Baugh" Saidapet.
Annual Subscription including Postage Re one only.

COPY RIGHT] [REGISTERED.

SAIDAPET

## கவனியுங்கள்

விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானால் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இந்திரிய வஸ்துக்கள் அடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் எலும்புத்தூள், ஐவ்வு, கொம்பு சீவல், புண்ணாக்குகள் முதலிய சகலமான எருக்களையும் அந்தந்தப் பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக அட்டகாசப்படுத்தி விற்கும் செயற்கை உரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு நிலவளமும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், மாசத்திற்கு மாசம் வருஷத்திற்கு வருஷம் அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமேயில்லை,

விலை முதலிய விவரங்களறிய விரும்புவோர்.—

ஏ.ஜெ.ரோட்ரிக்ஸ் அண்ட்கோ.

ஏஜண்ட் கடம்பூர் எருக்கிடங்கு

கடம்பூர் [S. I. R.)

என்று எழுதி முழு விவரங்களறியலாம்,

---

# ஜெயரங்கன்

## J. R. ரங்கராஜு

அவர்களால் எழுதப்படும் புதுநாவல் அச்சிலிருக்கிறது

கூடி தில் வெளிவரும். விலை ரூ. ஒன்றுதான்

---

## கம்மபாலன்

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருடசந்தா ரூ. 1 தான்

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தகபாரங்கள் எம்மிடம் கிடைக்கும்:

ஆர். வெங்கடசாமி நாயுடு

பத்திராதிபர் கம்மபாலன்

திருத்தங்கல்

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects*

# கிருஷிகன்

ஓர் மாதாந்திர விவசாயப் பத்திரிகை

Vol. XI. புத்தகம் 11 | 1929ம் ௵ மார்ச்சு 14உ விபவ ௵ தை 1உ | NO. XII. [illegible] 12.



THE REGISTRAR OF BOOKS ... No. ... 20 MAR 1929 ... MADRAS


## A REQUEST TO OUR SUBSCRIBERS

## நமது சந்தா நேயர்களுக்கு ஓர் அறிக்கை

நாம் சென்ற மாதச் சஞ்சிகையில் சுக்கில ௵ கிருஷிகன் தேவையில்லை யென்று எழுதாதவர்களுக்கும் மார்ச்சு ௴ 10ம் தேதிக்குள் சுக்கில௵ சந்தா மணியார்டர் செய்யாதவர்களுக்கும் இம்மாதப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதாக எழுதினோம். ஸ்ரீமான் ராவ் பஹதூர் ஜே செல்வரங்க ராஜு காரு அவ்வாறு பங்குனி பத்திரிகையை வி.பி.யில் அனுப்புதல் நியாயமல்லவென்று தெரிவித்ததால் பங்குனி பத்திரிகையை வி. பி. யில் அனுப்பவில்லை. இதுவரையில் மணியார்டர் செய்யாமலும், இனி தேவையில்லை யென்று எழுதாமலுமிருக்கும் கனவான்களை யெல்லாம் தயவு செய்து சுக்கில ௵ சந்தாவாகிய ரூ 1—0—0 உடனே மணியார்டர் செய்யக் கோருகிறோம். இரண்டும் செய்யாதவர்களுக்கு சுக்கில௵ சித்திரை ௴ பத்திரிகை வழக்கம்போல் வி பி. யில் அனுப்பப்படும். தயவு செய்து வி.பி.வந்தவுடனே பெற்றுக்கொள்ளாமல் பின்னால் பெற்றுக் கொள்ளலாமென நினைத்து இருந்தால் தபாலாபீசார் குறிப்பிட்ட நாள் வரையில் பார்த்துத் தங்களைக் கேட்காமலே வாபஸ் செய்து விடுவார்கள். பரோபகாரார்த்தமாய்ப் பத்திரிகை பிரசுரிக்கும் நமக்கு அனாவசியமாய் நஷ்டம் உண்டாக்காமலிருக்கும்படி இன்னுமோர் முறை வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். தேவையில்லாத கனவான்கள் தயவு செய்து முன்கூட்டியே அவ்விஷயத்தைத் தெரிவித்தால் நமக்கு நஷ்ட மேற்படாது.

# PREPARATION OF ORGANIC MANURES.

## RECENT RESEARCHES

## இந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்களைத் தயாரித்தலில் சமீபத்தில் செய்திருக்கும் ஆராய்ச்சிகள்

இவ்வுலகத்தில் தொன்று தொட்டு எல்லா தேசத்து கிருஷிகரும் உபயோகப் படுத்தியிருக்கும் எருப்பொருள்கள் எதுவென்று சற்று ஆலோசித்துப் பார்த்தால் முக்கியமாய் தாவர வர்க்கத்திலிருக்கும் பிராணி வர்க்கத்திலிருக்கும் கிடைத்த கழிவுப் பொருள்களையே சொல்ல இடமிருக்கிறது. நிலத்திலிருந்து கிடைக்கும் வஸ்துக்களை நிலத்திற்கே திரும்பவும் சேர்ப்பிக்க வேண்டுமென்பது தான் விவசாய சாஸ்திரத்தின் நோக்கமும் கொள்கையும் ஆகும். அதாவது ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து ஒரு குடியானவனுக்கு 100 பட்டணம் படி நெல்லும் 1000 இராத்தல் வைக்கோலும் ஒரு போகத்தில் கிடைத்தால் அந்த அளவு நெல்லும் வைக்கோலும் உற்பத்தியாக என்னென்ன உரச்சத்துக்கள் பூமியிலிருந்து எடுக்கப்பட்டனவோ அவைகளைத் திரும்பவும் அந்நிலத்திற்கு எருவாக இடவேண்டுமென்பது தான் கருத்து. "தோன்றுவனயாவும் அழிவதற்கே" அழிந்துபோகும் வஸ்துவும் விசேஷமாய் கடைசியாய்ப் பூமியினிடமே போய்ச் சேருகிறதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இப்படி அழிந்து போகும் வஸ்துவின் கொஞ்சபாகம் மாத்திரம் காற்று, ஆகாயத்தினிடம்போய்ச் சேருகிறது. இதுவும் மழை ஜலத்தோடு சேர்ந்து பூமியினிடத்திற்கே மறுபடியும் திரும்பி வருகிறது. ஊர்வன, நடப்பன, பறப்பன, முதலிய சகல ஜீவராசிகளும் சகலவகை தாவர வர்க்கங்களும் அழிவுபட்டவைகளை யல்லாமல் ஒன்றுவது நிலை பெற்றதல்ல. சீர் ஆலோசித்துப் பார்க்கும்போது இவைகள் ஒவ்வொன்றும் கடைசியில் பூமியை அடைகின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்து நானாவட்டத்தில் பூமியை விருத்தி பண்ணி வருகிறது. ஆகவே அனேக ஆயிரம் வருஷங்களாய் கிருஷிகர் தங்கள் நிலங்களுக்கு உபயோகப் படுத்திக்கொண்டு வந்த எருப்பொருள் தாவர ஜீவவர்க்கங்களின் கழிவுப் பொருள்களே யாகும்.

இத்தாவர ஜீவவர்க்கக் கழிவுப்பொருள்களை அநேக ஆயிரவருஷங்களாய் சீனதேசக் கிருஷிகரும் ஜப்பான் தேசக் கிருஷிகரும் சரியானபடி சேகரித்துப் பரிபாலனம் செய்து தங்களுடைய நிலங்களுக்கு எருவாக உபயோகப்படுத்தி வந்து கொண்டிருக்கிறார்கள். சீனு

விலும் ஜப்பானிலும் மனிதர்களுடைய மலமூத்திராதிகளை சரியானபடி சேகரித்து எருவாய் உபயோகப் படுத்துகிற வழக்கம் மாத்திரம் இருப்பதாக எண்ணக்கூடாது, இதைத்தவிர எல்லாவித குப்பை கூழம் எருகு முதலிய சகிவுப் பதார்த்தங்களை யெல்லாம் பத்திரமாயும் ஜாக்கிரதையாயும் சேகரித்து நல்ல எருவாக்குகிறார்கள்; அத்துடன் அந்தேசங்களிலுள்ள காட்டு இலாகாவைச் சேர்ந்த விஸ்தீரணம் [illegible]யும் பச்சிலை எருவிற்கும் மற்ற இலை சருகுகளிலிருந்து குப்பை எரு செய்வதற்கும் கிருஷிகருக்கு உபயோகப் படும்படி சகாயம் செய்யப்படுகிறது. இக்காடுகளிலிருந்து வேறு எவ்வித உபயோகத்திற்கும் உதவாத பச்சிலை தழைகள் புல் பூண்டு முதலிய வஸ்துக்களை யெல்லாம் மற்ற இந்திரிய வஸ்துப் பொருள்களுடன் சேர்த்து ஏரிகள் குளங்கள் குட்டைகள் நதிகள் கால்வாய்கள் சமுத்திரப் பிரிவுகள் முதலியவைகளில் படிந்திருக்கும் வண்டல் போன்ற மண்ணுடன் கலந்து மூட்டுப்போட்டு வைத்து கிரமமாய் எருவாக்குகிறார்கள். இப்படிச் சேர்த்து செய்யப்பட்ட எரு ஒரு சிலாக்யமான எருவாகக் கருதப்படுகிறது. இப்பிரகாரமாயும் இன்னும் பல வழிகளை யனுசரித்தும் சீன தேசத்திலும் ஜப்பான் தேசத்திலும் எரு சேகரிக்கப்பட்டு கொஞ்சமுங்கூட வேறு ரசாயன எருக்களை கிருஷிகர் வாங்கி உபயோகிக்காமல் சுமார் 4000 வருஷங்களாய் பூமியின் வளம் கெட்டுப் போகாதவண்ணம் சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். மேல் சொன்ன தேசங்களில் ஒரு குறித்த விஸ்தீரணத்திலிருந்து கிடைக்கும் மாகசூலைச் சாப்பிட்டு ஜீவிக்கும் நபர்கள் நமது இராஜதானியை விட எத்தனையோ பங்கு ஜாஸ்தியாயிருந்தும் அவர்கள் நமது கிருஷிகரை விட அந்த விஸ்தீரணத்தில் ஜாஸ்தி மாகசூலை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

நமது தேசத்திலும் ஆதிகாலம் முதல் நமது வவசாயிகள் இருக்கையில் அகப்படக்கூடிய இந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்களையே [illegible] வருகிறார்களென்று சொன்னாலும் சீனர்களையும் ஜப்பானியர்களையும் போல் அவ்வளவு கவனத்துடனும் ஜாக்கிரதையுடனும் எரு சேகரிப்பதில்லையென்று திட்டமாய்ச் சொல்ல இடமிருக்கிறது. ஏனென்றால் இத்தேசத்தில் சில நாகரீகக் கொள்கை என்று வைத்துக் கொண்டிருக்கும் சில ஆசாரக் கொள்கைகளினால் மனிதர் மலமூத்திராதிகள் எருவாய் உபயோகப் படுத்தப்படவில்லை. இப்போது சில வருஷங்களாய் மனிதர் மலத்தைச்சில இடங்களில் ஒருவாறு உபயோ

கப் படுத்தி வருகிறார்கள். பெரிய பட்டணங்களிலும் முனிசிபாலிடிகளிலும் இந்த அசுத்தமான வஸ்துவென்று கேவலமாய் நினைக்கப்படும் வஸ்துவைக் குழிகளில் போட்டு வைத்து மண்ணினால் மூடி அநேகமாய் 18 முதல் 24 மாதங்களுக்குப் பின்தான் அதைத் தோண்டி எடுத்து எருவாய் உபயோகிக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட இடங்களிலும் எருவைக் குழிகளில் போட்ட 18முதல் 24 மாதத்திற்குப் பின்தான் உபயோகிக்கக் கூடிய எருவாய் மாற்றப்படுகிறது. இப்படி அநேக நாள்களுக்கு மண்ணுக்குள் குழிகளில் மூடிவைப்பதில் அந்த எருவின் முக்கிய அம்சமாகிய நைட்ரஜன் என்னும் உரச்சத்து இரண்டுவிதக் காரணங்களால் கெட்டு சப்பியாகி விடுகிறது: மழைத்தண்ணீரினால் அதன் சத்து கொஞ்சம் அடித்துக் கொண்டு போவதினால் எருச்சத்து குறைகிறது. இந்த எரு ஆவியாய்க் காத்துரூபமாய் கண்ணுக்குப் புலப்படாமல் காற்றுடன் கலந்து போவது மற்றொரு கெடுதி. ஜாஸ்தி நாள்கள் இவ்வெருமண்ணுக்குள் இருக்க இருக்கஜாஸ்தி நஷ்டம் உண்டாகிறது. சீக்கிரம் எடுத்து உபயோகப்படுத்துவதற்கு அதின் துர்நாற்றம் இடம் கொடுக்கிறதில்லை. மேல் சொன்ன ஆவிரூபமாயும் தண்ணீரில் கரைந்து ஓடிப்போகும் எருச்சத்து அவம் போகாமல் பிரயத்தனங்கள்செய்து காப்பாற்றினால் அப்படி நஷ்டமாகும் வஸ்துக்கள் ஒரு கருப்பு நிறமுள்ள ஹியூமஸ் என்று சொல்லும் இந்திரிய வஸ்து எருவாய் மாறி அந்நஷ்டங்களைத் தடுத்து அந்த சத்தை இழந்து கெட்டுப் போக விடாமல் செய்து விடுகிறது. அத்துடன் துர்கந்தமாயும் அருவருப்பு கொடுக்கும் வஸ்து சீக்கிரத்தில் அதாவது 60 நாள்களுக்குள் நாற்றமில்லாத நல்ல எருவாகமாறிப் போகிறது. இவ்விதமாய்தான் சீனர்களும் ஜப்பானியர்களும் எருவைச் சேகரித்து உபயோகப் படுத்துகிறார்கள். மேற்சொன்ன தேசத்திலுள்ள கிருஷிகர் இது சாஸ்திர சம்மந்தமாய் நடக்கிற விசேஷம் என்று தெரிந்து கொள்ளாமல் தொன்று தொட்டுசெய்த வழக்கத்தை அனுசரித்தேசெய்து வருகிறார்கள்.

சாஸ்திர சம்மந்தமாய் ஆராய்ச்சிகள் செய்து பார்த்த டாக்டர் கில்பர்ட் பௌலர் என்பவர் இரண்டு மாதங்களுக்கு முன் சென்னையில் நடந்த சைன்ஸ் காங்கிரசுக்கு வந்திருக்கும்போது அவரை நாம் நேருநேரில் போய்க் கலந்து கேட்ட பொழுது அவர் இவ்விஷயத்தில் தான் கையாடி அனுபவ சித்திபெற்ற விஷயத்தைச் சொன்னார். அதை நாம் பரீட்சை செய்து பார்த்ததில் அதில் கொஞ்சம் கூட

சந்தேகிக்க இடமில்லையென்று திட்டமாய்ச் சொல்லலாம்! கிருஷிகர் வயல்களில் களை எடுக்கும்போது கிடைக்கும் களைப்பூண்டு புல் முதலியவைகளை ஓர் இடத்தில் சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டியது. இவைகள் கொஞ்சம் முத்தின செடி கொடிகளாயிருந்தால் அவைகளைத் துண்டு துண்டுகளாய் கத்திகொண்டுதரித்து துண்டுகளாக்கிச் சேகரித்து வைக்கவேண்டும்.

அப்பால் தினசரி கிடைக்கும் கக்கூஸ் அதாவது மனிதர் மலத்தைச் சுமார் 6 அடி நீளமானதும் இரண்டு அடி அகலமுள்ளதும் இரண்டு அடி ஆழத்துக்கு மேல் படாததுமான குளிவெட்டி அக்குளியில் அன்றாடகம் சேசரிக்கும் கக்கூஸ் எருவைப்போட்டு அதன்மேல் முன் சொல்லியபடி துண்டுதுண்டாய் வெட்டி வைத்திருக்கும் குப்பை, சருகு, புல், பூண்டு முதலியவைகளை சுமாராய் 3 பங்கு இடைமேலே சிதரி, அதன்மேல் சற்று மூத்திரமாவது அல்லது வெறும் தண்ணீராவது தினசரி தெளித்து வரவேண்டும்.

இப்படி அடுக்கடுக்காய் தினசரி ஒரு அடுக்குக்கு மேல் மறுபடியும் மலத்தையும் போட்டு அதன் மேல் சருகு செத்தைப் போட்டு அதன் மேல் தண்ணீர் தெளித்து நாலு ஐந்து நாள்கள் ஆனவுடன் அக்குவியலை மேலும்கீழுமாய் ஒரு ஆளை வைத்துப்பிரட்டிகாற்று உள்புகும்படி செய்து மறுபடியும் அந்தக்குவியல்மேல்தண்ணீர் தெழித்து இப்படிச் செய்துகொண்டு வந்தால் சுமார் மூன்றுவாரங்களான உடன் அக்குவியலில் புதுக் கக்கூஸ்போடாமல் இன்னுமொரு பள்ளத்தில் அதாவது இரண்டாவது பள்ளத்தில் மேல் சொன்ன பிரகாரமே போட்டுக்கொண்டுவர வேண்டும். ஆனால் முதலில் போட்ட பள்ளத்திலிருக்கும் குவியலை மாத்திரம் 5 நாள்களுக்கு ஒருதரம் நன்றாய் பிரட்டித் திருப்பிக் காற்றுட விட்டுத் தண்ணீர் தெழித்துக் கொண்டு வரவேண்டும். இப்படி செய்து வந்தால் எண்ணிக் கொண்டு முதலில்போட ஆரம்பித்ததிலிருந்து 6வதுவாரம் முடிவிலும், மேலும் மேலும் போடாமல் நிறுத்தினதிலிருந்து 3வாரத்திலும் முதல் குளியிலிருக்கும் எருவில் கொஞ்சம் கூட துர்நாற்றமில்லாமல் பழம் புழுதியைப் போலும் சாணி எருவைப்போலும் எவராலும் கையில் எடுத்து உபயோகிக்கும் வண்ணம் மாறி யாதொரு துர்கந்தமில்லாமல் போய் விடுகிறது. அப்படி தயாரான எரு உடனே செடிகளுக்கும் பயிர்களுக்கும் உபயோகப்படுத்த லாயக்காய் விடுகிறது. இப்படித் தயாரான எருவைப் பூராவும் எடுத்துப் பயிர்களுக்கு உப

யோகப்படுத்தி விடாமல் அதில் மூன்றில் ஒருபாகம் அப்படியே வைத்து அதை இரண்டாவது குளியில் சேகரித்துக் கொண்டிருக்கும் எருவுடன் கலந்து அதைப் பிரட்டி காற்றுட விட்டுவந்தால் இரண்டாம் குழியில் சேகரிக்கும் எருப் போட ஆரம்பித்தது முதல் 5 வாரத்திலும், மேலும் மேலும் போடாமல் நிறுத்திய 2 வாரங்களிலுமேயே நல்ல எருவாய் மாறி துர்கந்தமில்லாமல் ஆகிவிடுகிறது. இப்படிக் கலந்து உண்டான எருவில் மறுபடியும் மூன்றில் ஒருபாகம் வேறாகவைத்து புதிதாய் சேகரிக்கும் எருவுடன் இந்தப் பழைய எருவையும் கொஞ்சம் சேர்த்துக் கொண்டே வரவேண்டும். அப்போது எரு ஜல்தியாய் உபயோகப் படுத்த ஏது விருக்கிறது. எப்படிப் பாலை புரைசுத்துவதற்கு கொஞ்சம் மோர் அவசியமாய் விடவேண்டுமோ அப்பிரகாரம் பழைய எருவில் மூன்றில் ஒருபாகத்தைப் புதிதாய் சேகரிக்கும் எருவுடன் கூட்டிக் கலந்து கொண்டு வந்தால் அது ஜல்தியாய் துர்நாற்ற மில்லாமல் மாறுகிறது. இவ்விதம் நாம் இரண்டுமுறை செய்து அனுபோக மடைந்திருக்கிறோம்.

இம்மாதிரி செய்வதில் காற்றிலுள்ள கண்ணுக்குப் புலப்படாத அணுக்கிருமிகள் அவ்வெருவுடன் கலந்து அவைகள் வேலையைச் சரிவரச் செய்து அவ்வெருவை ஜல்தி சிதவடையச் செய்து நாற்றமில்லாமல் மாற்றுவதுடன் இந்திரிய வஸ்துபோன்ற ஹியூமஸ் என்னும் கறு நிறவஸ்துவாய் இலைசருகு கொடிகளையும் மாற்றி அதனால் முன்சொன்ன நஷ்டங்களும் ஏற்படாததோடு 18 மாதம்வரை குழிகளுக்குள்ளிருப்பதால் எருவில் சம்பவிக்கும் கெடுதல்களையும் தடுத்து அவமாகிப் போகும் எருச்சத்துப் பொருள்களையும் வெளிப்போகவிடாமல் கிரஹித்து வைத்துக் கொள்கிறதினால் குளிகளில் போட்டு 18 மாதத்திற்குப் பின் எடுக்கும் எருவைவிட இப்படி உண்டாக்கிய எருவில ஜாஸ்தி எருச்சத்து இருக்கிறதுடன் அதில துர்நாற்றமும்ஜல்தி மாறிப்போவதால் சீனாவிலும் ஜப்பானிலும் குப்பை கூழம் முதலியவைகளை ஜாக்கிரதையாய்ச் சேகரித்து இவ்விதம் நல்ல எருவாக்குவதில் பட்டணங்கள் சுத்தமாயிருப்பதுடன் நல்ல எருவும் கிடைக்கிறதாகத் தெரிகிறது. செத்தைகள் முதலியன சேர்ப்பதால் நல்ல சத்துள்ள எருவின் அளவும் அதிகமாகக ஏதுவாகின்றது. இதனால்தான் விவசாயக் கமிஷன் அங்கத்தினர்கள் சீனாதேசத்து ஜப்பான் தேசத்து விவசாயிகளிடமிருந்து இந்து தேசத்து விவசாயிகள் எருச் சேர்க்கும் வழிகளைக் கற்றுக்கொண்டு கையாடி

வரவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அடுத்த தடவையில் சாதாரணமாய் குப்பைகளை மேல்சொன்ன தேசத்தார் இலை சருகுகளிலிருந்து மாத்திரம் எவ்விதம் நல்ல எருவாகச் செய்கிறார்களென்பதை எழுதுவோம்.

## A PLEA FOR CAUSARINA CULTIVATION

## சவுக்கு மரங்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்குக் காரணங்கள்

சவுக்கு மரம் ஆஸ்திரேலியா கண்டத்திலிருந்து நமது நாட்டுக்கு கொண்டுவந்து வளர்த்த தினுசு மரங்களிலொன்று. இது முதல் முதல் இந்நாட்டில் கொண்டுவந்து வளர்க்க பிரயாசைப்பட்ட பொழுது எத்தனையோ விதமான ஆட்சேபணைகள் பலர் செய்தார்கள். 1885-86ம் வருஷங்களில் கூட சைதாப்பேட்டை விவசாய காலேஜ் தலைவராயும் அங்கிருந்த பண்ணை சூப்பிரண்டெண்ட் வேலை வகித்திருந்த காலஞ்சென்ற மெஸ்ஸர் ராபர்ட்சன் துரையவர்கள் இச்செடிக்கு நாளா வட்டத்தில நமது இராஜதானியில் நல்ல கிராக்கி ஏற்படுமென்று முன்கூட்டி எச்சரித்தும் அதை அசட்டை பண்ணினவர்கள் எத்தனை ஆயிரமென்று நமக்கு நன்றாய்த் தெரியும். இது போக கவர்ன்மெண்டார் இம்மரத்தின் சாகுபடியை பரவச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் நெல்லூர் முதலிய ஜில்லாக்களில் காட்டு இலாகா சார்பில் இதைப் பயிரிட்டு ஜனங்களுக்கு நிரூபித்துக் காட்ட ஏற்பாடுகள் செய்யும்போது எத்தனையோ பேர்கள் இந்த நஷ்டமான காரியத்தை கவர்ன்மெண்டார் ஏன் கையாடுகிறார்களென்றவர்களும் எனக்கு ரூபரூவில் தெரியும். ஜலமதப்படக் கூடிய மணல் பாங்கானதும் களர் சம்பந்தமான இடங்களிலும் லேசாய் பயிராகக் கூடியபயிர்களில் இதுவொன்று. மணல்மிகுந்த சமுத்திரக்கரை யோரங்களில் நாளுக்கு நாள் இப்பயிரின் விஸ்திரணம் பெருகிக்கொண்டே வந்திருக்கிறது. முதல்முதல் இப்பயிர் செய்தவர்கள் துணிந்து இத்துறையில் இறங்கும்போதும் இக்கட்டையை வைத்து எரித்த பாத்திரங்கள் சீக்கிரத்தில் கெட்டுப் போகிறதென்றும் ஆகையால் இது அடுப்புக் கட்டைக்கு இலாயக்கற்றதென்றும் அவதூறுகள் கூட செய்து வந்தார்கள்.

1885—1886ம் வருஷங்களில் இக்கட்டை டன் (2240) ராத்தலுக்கு விலை ரூ ஆறுமுதல் 7 வரை தானிருந்தது. இதன் விலை நாளுக்கு நாள் மற்ற வஸ்துக்களின் விலை ஏறினதுபோல் ஏறிக்கொண்டே வந்ததுடன் சென்னை முதலிய முக்கிய பட்டணங்களில் இக்கட்

டையைத் தவிர வேறு கட்டை அடுப்பெரிக்க ஒருவர் வாங்கினால் அடுப்பு சரியாய் எறிகிறதில்லை என்று ஆவலாதி சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இதனால் ஒன்றுக்கும் உதவாத கட்டை என்று 1885-86ல் சொன்ன இச்சவுக்கு விலை ஏற்றமும் மதிப்பும் நாளாவிருத்தியில் உண்டாயிற்று, தற்காலம் சென்னையிலும் அதற்கு அக்கம் பக்கங்களிலும் இந்தச் சவுக்குக்கட்டையின் விலை டன் (2240) இராத்தல் விலை ரூ முப்பதிலிருந்து ரூ 32 வரையிருக்கிறது, அதாவது ஐந்து மடங்கு ஜாஸ்தியாய் விட்டது. இப்பயிரைச் சாகுபடி செய்வதிலோ யாதொரு கஷ்டமும் ஜாஸ்தியாகவில்லை. முற்காலத்தில் 1000 சவுக்கு கண்கள் விலை ரூ ஐந்து முதல் ஆறு ரூபாயாயிருந்தது. தற்காலமோ 1000 கண்கள் விலை ரூ 1 முதல் ஒன்றரைக்குள் கிடைக்கும். தண்ணீர் விடக்கூலி மாத்திரம் சற்று ஜாஸ்தியாயிருக்கிறது. என்றாலும் அக்கூலி மூன்றில் ஒரு பாகம்தான் ஜாஸ்தியாயிருக்கிறதென்று சொல்லலாம். அநேக நிலச் சுவான்தார்களுக்கிருக்கும் ஜாஸ்தி விஸ்தீரணத்தை ஏககாலத்தில் பயிர் ஏற்றவும் சாதாரணப் பயிர்களால் சாகுபடி செய்யவும் போதுமான ஆள் சகாயம் பண முதல் முதலிய அசௌகரியங்கள் ஏற்படுங்காலங்களில் நிலம் மணல் சாரியாயிருக்குமிடங்களில் இச்சவுக்குப்பயிரைக் கஷ்டமில்லாமல் கொஞ்சம் சிரத்தை எடுத்து நட்டு பாதுகாத்து விட்டால் சில வருஷங்களில் இது தக்கபலன் கொடுக்கிறதென்றே நாம் நிட்டமாய்ச் சொல்ல இடமுண்டு. இதனால் நிலமும் நாளாவிருத்தியில் விருத்தியும் ஆகிறது. ஆகையால் கிருஷிகர் இம்மரத்தை எங்கெங்கு பயிரிடக் கூடுமோ ஆங்காங்கு நட்டு பிரயோஜனத்தை யடைவது நலம்.

## Sriman Rao Bahadur B  Viswanath

## ஸ்ரீமான் ராவ் பஹதூர் பி. விஸ்வநாத்

கோயம்புத்தூர் கவர்ன்மெண்ட் ரசாயன சாஸ்திரியாகிய ஸ்ரீமான் பி. விஸ்வநாத் எப். ஐ. சி அவர்களுக்கு ராவ் பஹதூர் பட்டம் அளித்ததைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். இவர் இந்திரிய வஸ்துக்களுள்ள எருக்களை உபயோகித்துப் பயிர் செய்து விளைந்த தானியங்களில்தான் பிராணவிருத்தி இருப்பதாகவும், ரசாயன எருக்களை மட்டும் உபயோகித்து விளைந்த தானியங்களில், உயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஷை சத்து இல்லையென்றும் சாஸ்திர ரீதியாய் ருஜுப்படுத்தி உலகத்திற்கு உபகாரம் செய்திருக்கிறார். இவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து இன்னும் உலகத்துக்கு உபகாரமான விஷயங்களைக் கண்டு பிடிக்கும்படி செய்ய வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

# PRESERVATION OF FODDER IN UNDER GROUND PITS

## கால்நடைத்தீனத்தை (புல் தட்டு முதலியவைகளைக் குழிகளில் பந்தோபஸ்து செய்து காப்பாற்றி வைத்தல்.

தென் ஜில்லாக்களில் தானியத்தை ஒப்பிடி செய்தபின்னர் கோட்டை கட்டி வைக்கோல் கூரைகளிலும் கூடைகள் அல்லது மரப்பலகைகளினாலும் மண்ணினால் செய்து வெர்த்த குதில்களிலும் சேகரித்து வைத்து வேண்டியபோது எடுத்து உபயோகிப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். விடுபட்ட ஜில்லாக்களாகிய பெல்லாரி, கடப்பை, கர்நூல், அனந்தபூர் முதலிய ஜில்லாக்களிலும் கோயம்புத்தூர் சேலம் முதலிய ஜில்லாக்களின் சில பிராந்தியங்களிலும் இன்றைக்கும் தானியங்களைப் பூமியில் வெட்டியிருக்கும் குழிகளில் போட்டுப் பந்தோபஸ்து செய்யும் வழக்கமிருக்கிறது. இப்பழக்கம் முக்கியமாய் சில நூற்றாண்டுகளுக்கு முன் அடிக்கடி இப்பிராந்தியங்களில் நடந்த சண்டை சச்சரவுகளினால் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கிருஷிகரின் மாமூல வீடுகளிலும் குதில்களிலும் களத்து மேடுகளிலும் எல்லாருக்கும் தெரியும் விதமாய் கட்டி வைத்திருந்தால் படை எடுத்து வரும் எதிரிகள் அத்தான்யங்களையும் இதர சொத்துக்களுடன் கொள்ளையிட்டு எடுத்துக் கொண்டுபோக நேர்ந்தது. இக்காரணம் கட்டித் தானியாதிகளை பூமிக்குள் குழிகள் அமைத்து அவைகளுள் பந்தோபஸ்து செய்து வைத்திருந்தால் அப்படி பந்தோபஸ்துசெய்தவர்களுக்கு மாத்திரம் தெரியுமே அல்லாமல் திடீரென்று படை எடுத்துவரும் எதிரிகளுக்குத் தெரியமாட்டாது. ஆகையால் எங்கெங்கு சண்டைச் சச்சரவுகள் அடிக்கடி நேர்ந்து கொண்டிருந்தனவோ அப்பேர்ப்பட்ட இடங்களிலெல்லாம் தானியாதிகளை இப்பிரகாரம் பந்தோபஸ்து செய்து வைத்திருந்து நல்ல விலை கிடைக்கும் காலத்திலாவது அல்லது சரியான மழைகளின்றி மாமூல் கப்பியாயிய பஞ்சங்கள் உண்டாகும் காலங்களிலாவது குழிகளுக்குள்ளிருக்கும் தானியாதிகளை வெளியே எடுத்து உபயோகப்படுத்தும் வழக்கமிருந்தது. இப்பழக்கம் நமது நாட்டாருக்கு நூதனமல்ல. எப்படி தானியாதிகளைக் குழிகளில் போட்டு வைத்திருந்து அப்பால் உபயோகப் படுத்துகிறோமோ அப்படியே பச்சைப்புல், பச்சைத்தாள் , கட்டு முதலியவைகளை பூமிக்குள் குழி வெட்டி அதில் போட்டுப் பத்திரப்படுத்தி பக்குவம் செய்து வைத்து கால்

நடைகளுக்கு உபயோகப்படுக்கும் வழக்கம் மேல் நாட்டாரால் கையாளப்பட்டு வருகிறது. இப்பழக்கத்திற்கு ஆங்கிலத்தில் Ensilage என்னிலேஜ் என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆதியில் இப்பசும் பூமியில் குழி வெட்டி அக்குழிகளுக்குள் மாத்திரம் போட்டுப் பதோபஸ்து செய்துவந்த பழக்கத்தை அவர்கள் நாளாவட்டத்தில் அபிவிருத்திசெய்து தற்காலம் பூமிக்கு மேலும் இதற்காகக் கட்டடங்கள் அமைத்து அக்கட்டடங்களிலும் இப்பச்சைப் புல், தட்டைபோன்ற வஸ்துகளைப் பந்தோபஸ்து செய்து (சாஸ்திர ரீதியாய்) அவைகளைப் பச்சைத்தழை போன்ற கால்நடைத்தீவனங்கள் அபூருபமாய் கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் சுத்தமாய்க் கிடைக்காத காலங்களிலும் எடுத்து உபயோகித்து தக்க பலன் அடைகிறார்கள்.

நமது நாட்டில் இப்பழக்கத்தைக் கையாட வேண்டிய அவசியமிருக்கிறதா இல்லையாவென்று ஒவ்வொரு கிருஷிகரும் தீர்க்கஆலோசனை செய்ய வேண்டிய அவசியம். ஏனென்றால் நமது நாட்டில் கால்நடைகளாலேயே எல்லா விவசாய வேலைகளும் செய்யப்பட்டு வரப்படுகின்றன. அப்பேர்ப்பட்ட கால்நடைகளின் நிலைமை திருப்திகாமாயில்லையென்பது எல்லோரும் அறிந்த விஷயம், சில வருஷங்களுக்குமுன் சிலாக்கியமாய் பால் கொடுத்துக் கொண்டிருந்தவர்க்ளுடைய ஜாதிகளின் சந்ததிகளிலிருந்து தற்காலம் அந்த மாதிரி கன்றுகளும் மாடுகளும் கிடைக்கிறது துர்லபமாய் விட்டது. இதற்கு முக்கிய காரணம் போதுமான கால்நடைத்தீவனம் முன் போல்கிடைக்கிறதில்லை. இது ஏன் சம்பவித்ததென்றால் முன்போல் கிருஷிகர்களாங்கள் பயிர் செய்யும் பயிர்கள்பெரும்பான்மை தானியப் பயிர்களாகப் பயிரிடுகிறதில்லை. இவ்வழக்கத்தை விட்டு தற்காலம் விற்பனைக்கு லாயக்கான கையில் பணங் கொடுக்கக் கூடிய பயிர்களாகிய பருத்தி மணிலாக் கொட்டைபுகையிலை,கரும்பு முதலிய இலாபம் தரக்கூடிய பணப்பயிர்களை ஜாஸ்தி சாகுபடி செய்து மனிதர் ஜீவனத்துக்கும் கால் நடைத்தீவனத்துக்கும் காரணபூதமாயிருக்கும் தானியப் பயிர்களின் விஸ்தீரணத்தைக் குறைத்துக் கொண்டே வருகிறார்கள். இப்படிப்பணம் கையில் கொடுக்கக் கூடிய வியாபாரப் பயிர்களை இலாபமாய்ச் செய்ய எரு ஜாஸ்தி வேண்டியதிருக்கிறது. ஆகையால் முன்னிருந்த கால் நடை எண்ணிக்கையை கால்நடைத் தீவனப்பயிரின் விஸ்தீரணத்திற்குத் தக்கபடி குறைக்கவும் இடமில்லை. சாகுபடியாகாமல் தரிசாய்க்கிடந்த நிலங்களெல்லாம் கைப்பற்றுக்குவந்து கொண்டிருக்கி

றது: மேய்ச்சல் நிலங்களும் குறைந்து விட்டது. ஆகையால் கால் நடைகளின் விருத்தி மெத்த கேவலமாகிக் கொண்டு வருகிறது. கால் நடை அபிவிருத்தியும் கால்நடை போஷணையும் ஒன்றை ஒன்று பொருத்த விஷயம். சரியான கால் நடைத்தீவனமும் போஷணையுமில்லாமல் எவ்வளவு நல்லவர்க்க மாடுகளைக் கொண்டு வந்து வர்க்க அபிவிருத்தி செய்ய முயன்றாலும், யாதொரு பலனும் சித்திக்கமாட்டாது. ஆகையால் கால் நடைத்தீவன அபிவிருத்தி விஷயத்தில் எல்லாரும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் நேரிடுகிறது.

நமது ராஜதானியில் உண்டாகும் மழையளவு சீதோஷ்ண பேதங்கள் முதலியவைகளின் ஏற்றத்தாழ்வினால் எப்போதும் கால் நடைகளுக்கு ஏராளமாகவும் போதுமான ஆகாரமும் கிடைப்பதில்லை. மழை அருவடையாகும் காலத்தில் கால் நடைகளுக்குப் போதுமானவும் சிலசமயங்களில் அளவுக்கு மிஞ்சியும் வைக்கோல் முதலிய தீவனம் கிடைக்கிறது. வெயில்காலத்திலோ மேய்ச்சல்காடுகளெல்லாம் காய்ந்து கொண்டு உயிர் வைத்துக் கொண்டிருக்கக் கூட ஆகாரம் கிடைக்காமல் கால் நடைகள் முள் புதர்களையும் நாகதாளி போன்றவைகளையும் தின்கிறதைப் பார்க்கிறோம். மழைகள் விழுந்த உடனே புல் பெருகும் முளைத்து மாடுகளுக்கு வயிரார தீவனம் கிடைக்கிறது. இப்படிப்பட்ட காலங்களில் அனேக இடங்களில் வேண்டிய அளவுக்கு ஜாஸ்தியான புல் முற்றி காய்ந்து போகிறதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட காலங்களில் பயிரிடும் பயிர்களிலிருந்து கிடைக்கும் வைக்கோல் தட்டை முதலியவைகள் காயப் போடப் போதுமான வசதியில்லாததால் வீணாய்க் கால்நடைகளால் மிதிபட்டு அழிகிறதும் பார்த்து வருகிறோம். மேல் நாடுகளில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஜாஸ்தியாயிருக்கும் புல் தினிசுகளையும் காய்ந்து பக்குவம் பதனக் கூடாமலிருக்கும் தட்டை வைக்கோல் முதலியவைகளையும் பூமிக்குள் வெட்டப்பட்டிருக்கும் குழிகளில் போட்டு அதன்மேல் சரியான பாரம் வைத்து அப்பச்சை தட்டை முதலியவைகள் காற்றுப்புகாமல் மக்கலடையாவண்ணம் பலமான மண், அல்லது கல்கள் வைத்துப் பாரம் ஏத்திச் சில வாரங்கள் வரை அப்படியே வைத்திருந்து அக்குழிகளை 3, 4 அல்லது மாதங்களுக்குப்பின் திறந்து பார்த்தால் அதில் போட்ட தட்டை யிருக்கும் எப்படியோ கெடாமலும் நல்லவாசனையுடனும் சற்று பழுப்பு நிறத்துடனும் உபயோகப் படுத்தக் கூடிய சத்துள்ள

பச்சைத் தீவனமாகிறது. இதைக் கால் நடைக்கு ஒரு தீவனம் கிடைக்காத காலங்களில் உபயோகித்து கால் நடைகளைக் காப்பாற்றலாம்.

விவசாயடிபார்ட்டு மெண்டார் சில வருஷங்களாய் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி ஆங்காங்கு பரீட்சைகள் செய்திருக்கிறார்கள்; இக்குழிகளில் எம்மாதிரி இத்தீவனங்களை த்திரப்படுத்துகிறதென்றும் இதுவரை விவசாய டிபார்ட்டு மெண்டால் இதனால் அடைந்திருக்கும் சித்திகளையும் இன்னொருமுறை எழுதப்படும்.

## Correspondence

### கடிதம்

ஐயா, கிருஷிகன் பத்திராசிரியரவர்களுக்கு

சரும்புக்குத்தகுந்த எரு எது வென்று எழுதக்கோருகிறேன்.

யஸ். ஏ. பார்த்தசாரதி பீ. எ- பிளீடர்

### பதில்

நிருபநேயர் கரும்புக்கு என்ன எரு சிலாக்கிய மானதென்று கேட்கிறார். கரும்புப் பயிருக்கு தழை சத்து எருத்தான் ஜாஸ்தி தேவை. புண்ணாக்குதினிசுகள், கக்கூஸ் எரு, ஆட்டெரு, மாட்டெரு, இலை தழை எருக்கள், மீன் எரு இப்பேர்க்கொத்த இந்திரிய வஸ்துக்கள் அடங்கிய எருக்களிலெல்லாம் தழை சத்து ஜாஸ்தியுண்டு. ரசாயன எருக்களில் சல்பேட் ஆப் அம்மோனியா, நைட்ரேட் ஆப் சோடா, கால்ஷியம் சைநமைட்டைப்போலொத்த எருக்களும் உண்டு. இவ்வெருக்கள் எங்கெங்கு என்னவிலைக்கு கிடைக்குமென்ற விஷயம் தெரிந்து உபயோகப் படுத்துதல் நலம். கிருஷிகர் சாதாரணமாய் ஆட்டுக் கிடைகட்டி சாருபடி செய்வதுண்டு. சில ஜில்லாக்களில் புண்ணாக்கு தினுசு அதாவது புங்கம்புண்ணாக்கு, புங்கம் இலை, பூ முதலியன வைத்து நல்ல பலன் எடுக்கிறார்கள். பூனாவில் கக்கூஸ் எருவிட்டு நல்ல லாபம் கிடைத்திருக்கிறது. கோதாவரியில் முத்துக்கொட்டை, மணிலா புண்ணாக்குகள் வைக்கிறார்கள். டாலூர் விவசாயப்பண்ணையில் பசுந்தாள் சாணி முதலியனபலன் கொடுத்திருக்கிறது. தனிஇரசாயன எருநல்லபலன் கொடுத்ததாகத் தெரியவில்லை.

ப. ர.

ஐயா கடிதம்

இதற்கு முன் எழுதினகார்டு கிடைத்திருக்கலாமே. சாம்புவார்வடகரை ஸ்ரீமான் ராமசாமி அய்யரவர்களுக்கு பலலெட்டர்கள் எழுதினதற்கு வந்த பதிலினால் கிருஷிகன் 11வது வால்யூம் வாங்கிப் படிப்பதோடும் தாமசியாமல் 25 சந்தாதாரர்கள் சேர்க்க முயற்சித்துவருவதாகவும் தெரிந்து சந்தோஷமடைந்தேன். அதின் பக்கத்திலுள்ள சுந்தரபாண்டிய புரத்திலிருந்து சந்தா

தார்கள் ஏற்படுவார்கள். மேலும் பலவரையும் தூண்டிக்கொண்டு வருகிறேன். என் நம்பர் 2042ஊத்துத் தண்ணீர் 4எக்கருக்கு கோடையிலும் பாயுமான தால் அந்த ஆதாரவைக் கொண்டு 3ம் போகம் உள்ளி பயிர் செய்ய ஆசையி ருக்கிறது' உள்ளி கிழங்கு விலகிராக்கியானதால் விதைபாவி நடத் தங்கள் உதவி வேண்டியிருக்கிறது:தபாலுக்கு வீண்சிலவுக்கு சம்மதமில்லாமல் கார்டு எழுதுகிறேன்: பதிலுக்கு லேபில் அடக்கம் செய்ய முடியவில்லை-லோபபுத்த யாவில்லை- அரை அணுவுக்கு 5ரூ தங்கள் தர்மத்திற்கு அனுப்ப சித்தமா யிருக்கிறேன்.வடக்கன்தளம் மாதுளை ஜாதி நல்லதாகஇல்லை- தங்கள் தோட் டத்திலிருந்து ஜாதிக்கு ஒருபழம் வீதம் அனுப்பி விலையையும் சிலவையும் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அதுபோலவே, கொடுக்காபுளிவிதை பத்துபடியும் வேணும். 11வது வால்யம் ஒருசஞ்சிகையில் நைட்சாயில் மலம் 24 மணி நேரத்தில் நாற்றம் நீங்கி உரமாக உபயோகப் படுத்த மார்க்க முன்னதாகப் பிரசுரித்திருக்கிறது. அந்த முறையை விஸ்தாரி மாக எழுதினல் பரோபகாரமாயிருக்கும்.இவிடம் அக்ரிகல்சரல் டைரெக்டர் அவர்களிடம் கிருஷிகன் விஷயமாக வழக்குப்போட உத்தேசித்திருக் கிறேன்.

ஜி. சங்கரநாராயண அய்யர்

பதில்

உள்ளிவிதை வேண்டியவர்கள் அவர்களிருக்கும் விவசாய டெப்டி டை ரெக்டர் மூலியமாய் எழுதிப்பெறலாம்' தென்ஆற்காடுஜில்லா டெப்டிடைரெ க்டர் அவர்களுக்காவது நெல்வி குப்பத்துக்கடுத்த பாலூர்விவசாயப் பண்ணை மானேஜரவர்களுக்காவது அல்லது அவரவர்களுக்குத்தெரிந்த கடலூர்மஞ்ச குப்பத்திலிருக்கும் இஷ்டர்களுக்காவது எழுதி வருத்திக் கொள்ள வேண்டு மே தவிர நமது உதவிதேடுவதில் பிரயோஜன மில்லை-மாதுளம் பழம் காலத் தில் உதவி புரியக்கூடும்: இப்போது நம்மிடம் பழங்களில்லை,கொடுக்காபுளி 10படி விதைக்காக முன் பணம் நமக்கு மணியார்டர் செய்தால் நாம் நல்ல விதை வாங்கியனுப்புவதில் தடையில்லை, பங்குனியில் பணம் அனுப்பவும்-

(Night Soil) மலம் 24 மணி நேரத்தில் உபயோகப்படுத்த சைன்ஸ் காங்கிரஸில் சொன்னபிரகாரம் பரீட்சித்துக்கொண்டிருக்கிறோம். அது அனுபவத்தில் சித்திபெற்றதும்வெளிப்படுத்தப்படும்.வாசாஞானம்பேசு வது நமது வேலையல்ல. விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களுடன் சிநே கித பாவமாயிருப்பது மேன்மை யென்பது நமது அபிப்பிராயம் .. ப. ர.

கடிதம்

கிருஷிகன் பத்திராதிபர் அவர்கள் சமூகத்திற்கு சிறுமணிநெல் கதிர் வரும் சமயத்தில் கதிர்கள் பால் பிடிக்காமல் வெண்கதிர்களாய்ப் போய் விடுகிறது: அத்தத்தண்டிலேயே பூச்சி பிடித்து விடுகிறது, இதற்கு என்ன பரிகாரம் செய்தால் அந்த பூச்சிபோகும்' சம்பாவிலும் இம்மாதிரிஇருக்

கிறது- இதுகளுக்குப்பரிகாரம் தெரிவிக்கக் கோருகிறேன்:

எ. ஆர். ரங்கநாதம்

பதில்

நிருப நேயர் குறிப்பிட்டிருக்கும் பூச்சிக்கு தமிழ் ஜில்லாக்களில் 'நாவை' பூச்சியென்றும்' 'கிளி' யென்றும் சொல்லுகிறதுண்டு, தென்கன்னடம் ஜில்லாவில் இதை பம்பூச்சி யென்றும் மலையாளம் ஜில்லாவில் கழி என்றும் சொல்லுவதுண்டு. தெலுங்கில் 'சிலகலு' என்று சொல்வதுண்டு, இப்பூச்சி நீண்டதாயும் நுண்ணியதாயும் பச்சை பழுப்பு நிறத்துடன் கூடியதாயும் நீண்டகால்களும், உணர்ச்சி கொடுக்குகளும் மிரக்கைகளும் உடையதாயுமிருக்கும்- இப்பூச்சிக்கு நீண்ட கூரான குழல்போன்ற மூக்குமுண்டு- அதனால் இப்பூச்சி கதிர்களிலும் கதிர் காம்புகளுக்குள்ளும் பச்சையாயிருக்கும் தானியங்களுக்குள்ளும் துளைத்து அவைகளிலுள்ள பாலை உறுஞ்சும். நெல்பயிர் கதிர்வாங்கி அன்னம்பிடிக்கும் சமயத்தில் இப்பூச்சிகள் ஆயிரக் கணக்காய் உற்பத்தியாகி கதிர்களுக்கும் பயிருக்கும் கெடுதலை உண்டாக்கும்-இதனால் சிலசமயங்களில கதிர் பூராவும் காய்ந்தாப்போவிருக்கும். அதனால் அனேகமாய் தனித்தனி நெல்மாத்திரம் தான் கெடுதலடைந்து பதராகும்.

கிருஷிகர் இப்பூச்சிகளின் பாதையால் கதிர்களும் தானியமும் காய்ந்து போன பின்தான் கண்டு பிடிக்கிறார்கள். இச்சங்கதி முன்னமே அவர்களுக்குத் தெரிந்தால் ஒருவிதமான கெட்டி கொசுவலைத்துணியில் செய்த வலையால் இவைகளைப் பிடித்துக்கொல்லக் கூடும். இக்கைவலை செய்வது மிகவும் சுலபமான காரியம், வாய்பக்கத்தில் ஒன்றறை அடி அகலமுள்ளதும் 2 அடி நீளமுள்ளதுமாய் முரட்டுத்துணியில ஒருபக்கம் திறந்துள்ளதாய் பைசெய்து ஒருவளைந்த மூங்கிலில் அல்லது பிரம்புவளையத்தில் கோற்கும்படி பையின வாய்ப்பக்கம் துணியை மடித்துத் தைத்து வைத்துக்கொண்டு இப்பூச்சிகளைப் பிடிக்கலாம், மேல்சொன்ன வளையத்திற்கு கவையுள்ள கிளையாகிய கைப்பிடியைக் கட்டவேண்டும், மலையாளத்தில் பூச்சிகளால் பீடிக்கப்பட்டால் துவர்த்த முண்டாய் உபயோகிக்கும் துணிகளால் இப்பைகளைச் செய்வதுண்டு- இப்பயிர்களைக் கதிர்களுக்கு எல்லாப் பக்கங்களிலும் நன்றாய்ப்படும்படி இழுத்துக்கொண்டுபோனால் ஏராளமாய் பூச்சிகளைப் பிடிக்கலாம், இவ்வாறு பிடிபட்ட பூச்சிகளை கிரோசின் எண்ணெ (மண்எண்ணெ) கலந்த தண்ணீரை பானைகளில் ஊற்றி அப்பானைகளில் இப்பூச்சிகளைக் கொட்டிவிட்டால் செத்துப்போகும். இவ்விதம் அனேகம் ஆயிரம் பூச்சிகளைப்பிடித்துப் பரிர்களை கெட்டுப்போகாமல்செய்து கொள்ளலாம், மேற்சொல்லிய பிரகாரம் ஒரு கிருஷிகன் மாத்திரம் செய்வதில் பிரயோஜனப்படாது' ஒரு ஊரிலுள்ள நெல் சாகுபடி செய்யும் எல்லாரும் சேர்ந்து ஒத்து

ளாத்து ஏககாலத்தில் அவரவர்கள்பயிரில் செய்தால் பூச்சியின் பாதைமற்ற இடங்களுக்குப்பரவாது. நெல்பயிரில்லாத காலம் அதாவது அறுவடையான பின் இப்பூச்சிகள் வரப்புகள் நெல்தாள்கள் முதலியவைகளில் ஜீவித்து மறுபடியும் நெல்பயிர் உண்டானவுடனே நெல்லைத் தாக்கிக் கெடுக்கிறதுண்டு.

ப. ர்:

கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு அள்ளமுத்தூர் தங்கள் பத்திரிகைக்கு சந்தாதாரராகிய எ. கெ. ராமநாதம் எழுதும் கேள்விகளுக்கு தங்கள் கிருஷிகன் மூலமாய் பதில் வெளியிடும்படி கோருகிறேன்,

கேள்விகள்:—(1) இரண்டாம்போகம் சொர்ணவாரிக்கு ஒருஏக்கருக்கு என்னென்ன எருக்கள் போடவேண்டும்? கண்டு முதல் எப்படி? சல்பேட் அம்மோனியா போடலாமா?

(2) மானவாரி கத்திரி, முளகாய் கருணை, இவைகளுக்கு ஒரு ஏக்கருக்கு என்ன எருக்கள்தேவை.

(3) இறைப்பு மணிலாக்கொட்டை இவைகளைப்பற்றி கொஞ்சம் தெளிவாய் எழுதவேண்டியது:

(4) தற்சமயம் நெல்பயிர் கதிர்விடும்போது ஓர்வகை பூச்சி சிவப்பு நிறமாய்விடுகிறது. இதற்கு பரிகாரம் என்ன? வ

(5) முதல் கேள்வியில் கொல்லை வரகு வைக்கோல் போடலாமா? நடவு விசேஷமா? விதைப்பு விசேஷமா?

(6) நல்லஜாதி பசுக்கள், எருதுகள், எருமைக்கடாக்கள் அகப்படும் இடம் விலை விபரங்களும் தெரியப்படுத்தவும்.

(7) பொலி எருமைக் கடாக்கள் அயர்செயர் காளைகள் இவைகளைப்பற்றி விலைவிபரம் எழுதவேண்டியது.

(8) மொந்தன்வாழை எந்தெந்த மாதங்களில்எந்தவிதமாக வைக்கலாம்?

(9) அவுரியும் என்னும் மாசி மீத்தில் நஞ்சையில் விதைக்கலாமா? சிரமங்களுக்கு மன்னிக்கவும்.

A. K.ராமநாதம்

பதில்

நிருப நேயர் எந்தமாதம் சுவர்ணவாரி இரண்டாம் போகம் விளைவிக்க உத்தேசித்திருக்கிறாரென்று எழுதவில்லை. சுவர்ணவாரி தினுசு சாதாரணமாய் சித்திரை வைகாசி மாதங்களில் தான் பயிரிடுகிறது வழக்கம், அதற்குத்தக்க உஷ்ணமில்லாவிட்டால் நல்ல பலன்கொடுக்காது. சிலர் விதை முதலுக்காக மார்கழிமாதத்தில் விதைக்கிறதுமுண்டு. இப்படி விதைத்தால் பயிர் குளிரினால் எவ்வளவு எருச்செய்தாலும் நல்ல பலன் எமது அனுபோகத்தில் கொடுத்ததில்லை, சல்பேட் ஆப் அம்மோனியா நாம் உபயோகித்து அனுபவமில்லாததால் திட்டமாய் பலன் என்ன கிடைக்குமென்று நாம் சொல்லமுடி

யாது. பொதுவாய் குளிர்காலத்தில் பயிர்செய்யும் களர்ணவாரி என்ன எருச் செய்தாலும் வெயில் காலத்தில் சாகுபடி செய்த பயிரளவுபலன் சாதாரணமாய் கொடுப்பதில்லை யென்பதை மாத்திரம் நாம் திட்டமாய்ச் சொல்ல இடமுண்டு.

2, கிருபயேர் அறிக்கும் பயிர்களுக்கெல்லாம் ஆட்டெரு மாட்டெருவைப்போல் வேருஎருக்கள் உபகாரப்படாது.

(3) இறைப்பு மணிலாக்கொட்டையைக் குறித்து என்ன விஷயம் தெளிவாய் எழுதவேண்டுமென்று தெரிவித்தால் எழுதக்கூடும். பொதுவாய் எழுதுவதில் பிரயோஜனமில்லை. அதைக்குறித்து எழுதவேண்டுமென்றால் ஒருபுஸ்தகம் எழுதலாம். கிருபயேயரை விவசாய டிபார்டுமென்டார் அப்பயிரைக்குறித்து எழுதியிருக்கும் துண்டு பத்திரிக்கைகளை வாங்கிப்படிக்கும்படி சிபார்சு செய்கிறோம்.

(4) புழு பூச்சிகளைக் குறித்து மாதிரிபிடித்து கோயம்புத்தூர் விவசாய கலாசாலையிலிருக்கும் பூச்சி சாஸ்திரிக்கு அனுப்பினால் திட்டமாய் என்ன வியாதியென்றும் அதற்கு என்ன சிகிச்சை செய்யவேண்டுமென்றும் எழுதுவார்கள்.

கதிர் வரும்போதும் அன்னம்பிடிக்கும்போதும் காவாம்பூச்சி என்று ஒரு கிளிப்போன்ற பூச்சிவிழுந்து பாலை உருஞ்சும் வழக்கமுண்டு.

(5) நெல்பயிருக்கு வாகு வைக்கோல் களர் சம்மந்தமான நிலங்களில் விதைவிதைத்து முளைவருவும் சந்தர்ப்பத்தில் சிதறுவதுண்டு இது எருவுக்காகவல்ல. களர்சம்மந்தமான உப்புகள் தண்ணீரின்மேலேவராமல் தான் இவ்வளவும் செய்வதுண்டு. களரைக் கெடுப்பதற்கும் இவ்வைக்கோலை சேற்றில் போட்டு அமுக்குவதும் உண்டு. நெல்சாகுபடியில் நடுவையில் கிடைக்கும் பலனைப்போல் விதைப்பயிர் சாதாரணமாய் பலன் கொடுப்பதில்லை.

(6) நல்லஜாதிப்பசுக்கள், எருதுகள் எருமைகள் கிடைக்குமிடம்; விலை விவரத்தைக்குறித்து சேலம் ஜில்லா ஒசூரிலிருக்கும் கால் நடை டிப்டி டைரெக்டர் அவர்களுக்கு மனுச்செய்துகொண்டால் விவரமான பதிலும ஆலோசனையும்கொடுப்பார்கள்.

(8) மொந்தம் வாழை சாதாரணமாய் தைமாசிபட்டத்திலும், ஆனி ஆடிபட்டத்திலும் போடுவதுவழக்கம். சில இடங்களில் வாழையை வருஷம் பூராவும்நட்டுக் கொண்டிருக்கிறார்கள்

(9) அவுரியும் எள்ளும் மாசிமாதத்தில் நஞ்சையில் நெல் அருவடையானபின்) விதைக்கலாம். ப. ர.

ருமவிலாஸம் இலஞ்சி

கனம் ரங்காராஜு அவர்கள் திவ்விய பார்வைக்கு 2192ம் நெ.சந்தாதார் எழுதிக்கொண்ட விஷயம் என்ன வென்றால் கீழ்கண்ட விஷயங்களுக்கு தயவு கூர்ந்து பதிலளிக்கு மாறு பிரார்த்திக்கின்றேன்.

எனக்கு சொந்தமான வெள்ளக்கருள் அதோட்டக்கால்நிலம் ஒன்றிருக்கிறது: அதில் கிணறு ஒன்றுள்ளது: அதிலிரண்டு கமலைகள் போட்டிருக்கிறேன்: வேலியோரமாகப் பிலாமரங்கள் நிற்கின்றன. நிலம் சரள்கலந்த செம்மண்ணாகவும் சில பக்கம் தனிச்செம்மண்ணாகவுமிருக்கின்றது: வேலியோரமாக மாதுளை ஒட்டுமா, எலுமிச்சம் போடலாமா? தென்னங்கன்று போடப்பட்டிருக்கின்றது: மேற்சொன்ன செடிகளைப் போடுவதற்கு என்னென்ன பக்குவங்கள் செய்ய வேண்டும்

தென்னங்கன்றுகள் போட்டு ஒன்றரை வருஷமாகின்றது, மத்தியபாகத்தில் உளுந்து, சோளம், முதலிய பூம் பயிரிடப் படுகின்றது. வேறு என்னென்ன பூம்பயிரிடலாம்?

ஒட்டுமா காய்ப்புள்ள மரம் மதாளித்து நிற்கின்றது. சிலகாய்ப்பில்லை. அதற்கு என்ன உரம் போடலாம்? கவாத்து செய்யலாமா?

காய்ப்புள்ள தென்னைமரங்களுக்கு என்ன உரம் செய்யலாம்? தொழு எரு போடலாமா? அத்துடன் என்னென்ன செயற்கை உரங்கள் சேர்க்கலாம்?

எலுமிச்சங்கன்று நட்டு இரண்டு மூன்று வருஷமாகின்றது. நுனி கருகால் பாரிப்போய் நிற்கின்றது. காரணம் என்ன? தண்ணீர் குறைவினாலா அல்லது நிலவசதியா. என்ன உரம் போடலாம்?

பிலா மரங்கள் மதாளித்து நிற்கின்றன. அவ்வளவாகக் காய்ப்பில்லை என்ன பரிகாரம் செய்யலாம்? அதற்குக் என்ன உரம்போடலாம்? சுற்றிலும் வேரைத் தோண்டிப் போட வேண்டுமென்றும் கல்சாவி போட்டால் கன்று காய்க்குமென்றும் சிலர் சொல்வதால் அப்படிச் செய்யலாமா? பூம்பயிர் செய்யும் மத்யபாகத்தில் பாக்கு செல்வி நடக்கலாமா? அப்படியானால் தாங்கள் விதை தருவித்துக்கொடுப்பீர்களா?

மேற்கண்ட விஷயங்களுக்குதயவு கூர்ந்து அடுத்தசஞ்சிகையில்பதிலளிக்குமாறு பிரார்த்திக்கின்றேன். சிரமத்திற்கு மன்னிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்றும் மறவா

அன்புள்ள,

டி. இ. ஷண்முகம் பிள்ளை

பதில்

நிருபநேயர் குறிப்பிட்டிக்கும் வேலி ஓரத்தில் பிலாமரங்களிருப்பதாலும் தென்னங் கன்றுகள் போடப்பட்டிருப்பதாலும் அங்கு ஒட்டுமா எலுமிச்சை மாதுளை முதலியது நட்டால் நல்ல பலன் கிடைக்காதென்பது எமது அபிப்பிராயம். ஏனென்றால் இப்போது நட்டிருக்கும் பிலா தென்னையே சரியாய்க்காய்க்கமாட்டாது, வேலியில் வேர்கள் இச்செடிகளுக்குக் கிடைக்கும் சத்தைக் கிரகித்துக் கொள்ளும். ஆதலால் பலன் சரியானபடி கிடைக்காது. நிழலினாலும் காற்றோட்டக் குறைவினாலும் கெடுதலும் சம்பவிக்கும்.

தென்னங் கன்றுக்கும் மத்தியில் சில வருஷங்களுக்கு இறுங்கு கேப்பை, கத்திரி வெண்டை முதலிய பயிர்கள் போட்டுப் பலனடையலாம். ஒட்டு மாவில் சில தினுசுகள்தான் வருஷா வருஷம் தப்பாமல் காய்க்கும், மற்றவைகள் இரண்டு வருஷத்திற்கு அல்லது மூன்று வருஷத்துக் கொருதரந்தான் காய்க்கும். காய்ப்பின்மைக்கு அநேக காரணங்களுண்டு. எதனால் காய்க்கவில்லையென்று பார்க்காமல் சொல்ல முடியாது: சமீபத்திலுள்ள விவசாய இலாகா உத்தியோகஸ்தரைக் கலந்து கொள்ளுதல் நலம். நாம் பங்குனி சித்திரை மாதங்களில் வீரசோளம் புகுருக்கவா உத்தேசித்திருக்கிறோம். அப்போது எழுதினால் நேரில் பார்த்து கூடியவரை ஆலோசனை சொல்லக் கூடும். காய்ப்புள்ள தென்னை மரங்கள் செடிகளைச் சுற்றி நன்றாய் 1 முதல் ஒன்றரை அடி ஆழம் கொத்தி பழைய வேர்கள் அறும்படி செய்து செடி ஒன்றுக்கு 10 இராத்தலுக்கு கம்மிப்படாமல் மீன்குவானோ எருவும் பச்சை இலையையும் பரத்தி தண்ணீர் விட்டு வரலாம். மீன்குவானோ கிடைக்காத பக்ஷத்தில் பச்சை இலை குழையுடன் எலும்புத்தூள் சாம்பல் முதலியவை போட்டு மூடி தண்ணீர் பாய்ச்சலாம், கன்னம்பட்டை சுட்ட சாம்பலும் இத்துடன் சேர்த்து போடுதல் நலம் சொற்ப எருவுடன் எலும்புத்தூள் சேர்த்து போடலாம். எலுமிச்சையைக்குறித்து நேரில் பார்த்துதான் சொல்ல முடியும். பலா மரங்களைச் சுற்றி நன்றாய்க்கொத்திக்கொடுத்து புத்தமண் சாணி எரு முதலியவை போட்டதில் நமக்கு நல்ல பலன் கொடுத்திருக்கிறது. பரீட்சைசெய்து பார்க்கலாம், ஆனால் இவ்விதம் செய்வது மார்கழி மாதத்திற்குமுன். பின் செய்தால் பலனிருக்கமாட்டாது. நெல் சாவி போடுவதின் காரணத்து அது ஈரத்தைகாத்துக்கொண்டிருக்கு மென்பதை ஒழிய வேறு அதற்கு ஒரு சத்து இருப்பதாக நாம் சொல்ல முடியாது. பாங்கு நெல் விதை நாம் தருவித்து கொடுக்கக்கூடும், ஆனால் கிருபநேயர் குறிக்கும் இடத்தில் பயிர் செய்யக் கூடாது.

ப. ர்.

கனம் கிருஷிகன் பத்திராசிரியவர்களுக்கு

கிருஷிகன் 2117ம் நெர் சந்தாதார் செக்கியாபேம் பெருமாள் எழுதிக் கொள்ளும் விக்ஞாபனம். க்ஷேமம் அஃதேயவா இதனடியிற் கண்ட சம்சயங்களை கிருஷி அனுபவம் நிறைந்த தங்கள் விசாலமான மேதையறிவிற் கூட்டி அவற்றை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1: திராக்ஷை விவசாயம்:

(1) கன்றுகள்;—இவைகள் பெரிய செடியின் ஒரு அடிக்குச்சிகளை அறுத்து, நட்டு துளிர்த்தபின் தொட்டிகளில் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றையினி ஆனியில்குழி வெட்டி, உரமிட்டுபதிக்கலாமா? அல்லது செடியுடன் பதிகமிட்டு, வேர் இட்டபின் அறுத்து விட்டு அப்படியேகுழிகளில் இறக்கவேண்டுமா?

(2) குழிகளிற் செய்யவேண்டிய உரங்கள் யாவை?

(3) நடவு— இதில் 3 அடி ஆழமுள்ள குழியில் வண்டல் அடி முதல் உரமிட்டு அதிற்கன்றைப்பதித்து செடி வளர வளர குழியை நிறப்பி செடி வளரும்போது ஆணிவேராகிய நடுத்தண்டை வெட்டி விட்டுபக்கவேர்கள் 10 க்குக்குமறையாமல் விடுத்து வளர்க்கவேண்டுமென்பார் பலரும்;

இன்னும், மேல் தரை மட்டம்வரை 3 அடிக்குழியில உரம் கலந்த மண் இட்டு குழிமத்தியில் ஓர் சவுக்கமான சிறுகல்லின மேல் செடியைப் பதித்து பக்கவேர்களில் செடியை நிற்கச்செய்ய வேண்டுமென்பார் சிலரும்; குழிக்குள் மணலிட்டு செடியை வைக்க வேண்டுமென்பார் சிலரும்; இவ்விதம் பலர் பலவாறு பிரஸ்தாபிப்பதால மனம் ஓர் முகப்படவில்லை. ஆதலால் எவ்விதம் உரமிட்டு எப்படி நடவேண்டும்?

(4) காவாத்து:—இதை அனுபவமுள்ள தோட்ட வேலைக்காரர்களைக்கொண்டு செய்யாவிடில் அவர்கள் வருவதே கஷ்டம், வரினும் சோம்பேரித்தனத்தாலும் அரியாமையாலும ஒன்றுக்கு ஒன்றைச் செய்து விட்டு கூலியைமட்டும் கைக்கொண்டு செல்லுகிறார்கள். அவ்வித கஷ்டமன்னியில் நாமே நமது வேலையாட்களைக் கொண்டு செய்ய வேண்டுமாதலின காவாத் செய்ய வேண்டிய மாதமும் தயாரித்து வைக்க வேண்டிய உரமும், வைக்கும் விதமும் இன்னும் கவனிக்கவேண்டிய விஷயங்களும் யாவை?

5 எத்தனை அடிக்கு ஒரு செடிவீதம் வைக்கவேண்டும்? பந்தலின் உயரம் அகலம் அளவு யாது?

இ. லுமிச்சை நார்த்தைகள் ஒருவருஷம் வயதுள்ளவை 1 அடி உயரத்திலும் இப்போது புதியதாய்ப் பதித்தவைகள் சிலதுமாயிருக்கின்றன. அவைகட்கு எந்தவயசில், எம்மாதத்தில் எவ்வித உரமிட வேண்டும்.

3. வைகாசி ஆனியில் தோட்டக்கால் நிலங்களில் செய்யவசாகு படியைப் போல் பயிரிடக் கூடிய பங்களூர் வகை பக்காவுக்கு 3படி விதை தேவையாயிருக்கிறது. இது தங்களிடமிருக்குமேல் வி. பி. யிலனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அல்லது கிடைக்குமவிலாசம் கொடுப்பினும் நானே நேரில் வரவழைத்துக் கொள்ளுகிறேன்.

4. இவிடம் எனது தோட்டத்தில் 10 தென்னைகள் நன்றாய்க் காய்ப்பதும், சொற்பக் காய்ப்புள்ளவை சிலதுமாயிருக்கின்றன, அவைகட்கு வயது சிலவற்றிற்கு 5 ம், சிலவற்றிற்கு 100 வயதுமிருக்கலாம். அவைகட்கு முன்னர் மரம் 1க்கு ஒருவண்டி நாகதாளி அதாவது சப்பாத்துக் கள்ளிச்செடியை போட்டிடதில அவ்வருஷம நன்றாயக காய்த்தன. அடுத்தவருஷம் காய்ப்புக்குறைந்துவிட்டன. அந்த நாகதாளியைக் கொண்டுவந்து சப்பாத்துக்கள்ளி உரமிடுவதில சிரமமும் கூலி ஜாஸ்தியுமாகிறது. ஆதலால் சாதாரணமாய்க் கிடைக்கக் கூடிய உரங்களில எவ்வுரம் எவ்வளவு இடலாம்? சிவ ரீ

சாம்பல் அல்லது ஆற்றுமணல் இவைகளை இடச்சொல்லுகிறார்கள். அப்படிச் செய்யலாமா?

5. முல்லைப் பூப்பதியன்கள் வைத்து 2வருஷம் ஆகிறது. அவைகட்குஎத் தனை எவ்வித உரமிடலாம்?

இசைக்கியாடும் பெருமாள்.

பதில்.

திராட்சை முற்றியகொடிகளிலிருந்து அருத்தபுள்ளுகளை நட்டு அதி லிருந்து துளிர்விட்டு வரும்செடிகளை நடுவதுதான் வழக்கம். கொடியை யே கிளைவிலக்கி பதியம்போட்டு அதைஎடுத்து நடவும் நடலாம். ஆனால் அவ்வளவு பிரயாசை வேண்டியதில்லை. சாதாரணமாய்க் கையாடுவது கிளை கத்தரித்து நிலத்தில் ஊன்றி செடி நடுதலே வழக்கம்.

சாதாரணமாய் கிருப நேயர் தற்காலம் உண்டாக்கியிருக்கும்செடிகளை குழிகளில் நடலாம்.

(2) நல்லவண்டல் மண்போட்டு அத்துடன் எலும்புத்தூள் போட்டு கொஞ்சம் செத்தை, மக்கினஉரமாவது அல்லது நன்றாய்மக்கின ஆட்டு அல்லது மாட்டுச்சாணி கலந்து குழிரொப்பி செடிகளை நடலாம்.

(3) குழிகள் நிறையரொப்பி அதில் செடி நடுவதுதான் யோக்கியம். குழிகளிலுள்ள பள்ளத்தில் நட்டுசெடிவளரவளர குழியைரொப்பிக்கொண்டு வருதல் அவ்வளவு யோக்கியமல்ல.

(4) செடி ஒரே தண்டாய் பந்தல்வரை போகச்செய்து பந்தல் உயரம் போகும்வரை பக்கங்களில்கொடி விடக்கூடாது. இதற்குச்சுமார்ஒருவருஷமாய்விடும். அப்பால் பந்தல்மேல் ஓடியிருக்கும் நடுத்தண்டைசுமார் 3 அடி நீளம் பந்தல் மேல்விட்டுவிட்டு மற்றதை பூராவும் கத்தரித்து எரித்து போட வேண்டும். இதே சமயத்தில் செடியைச்சுற்றி 3. 4 அடி தூரத்துக்கு கொத்தி பழய வேர்கள் அறுபடும்படி செய்து புதுமண்ணும், உரமும் கலந்து தோண்டிய மண்ணை அப்புறப்படுத்திய இடத்தில் போட்டு மூடி ஜலம் பாய்ச்சிவரவேண்டும்.

கவாத்து செய்யும்விதம் நாம் பங்குனிமாதம் பாளையங்கோட்டை வரும் போது ருபுருவில் காட்டமுடியும். அந்த மாதத்தில்ஞாபகப்படுத்தவேண்டும்.

திராட்சை செடி சாதாரணமாய் 18முதல் 20அடி தூரத்துக்கு ஒன்று வைக்கலாம். இலுமிச்சை விஷயமும் அப்போது ருபுருவில்விவரித்தல்நலம்.

வைகாசி ஆனிமாதங்களில் பயிரிடக் கூடிய பங்குநெல்விதை 3படிஇனி ஒருவாரத்தில் எழுதினால்அனுப்பப்படும்;

தென்னம்பிள்ளைகளுக்குச்சுத்திகொத்திசெடிஒன்றுக்கு10இராத்தல்மீன் புண்ணாக்குவைத்து தினங்களையும் போட்டு ஜலம் பாய்ச்சி அனுபவத்தைஎழுதினால் மற்றவர்களுக்கு பிரயோஜனமாகும்—முல்லைக்கு வெயில் காலத்தில்

தண்ணீர் ஜாஸ்தி கட்டாமல் காய்விட்டு வேர்பக்கம்கொத்தி சாதாரண ஆட்டு சாணி மாட்டுசாணியிட்டுமூடி ஜலம் பாய்த்தால்நன்றாய்ப் புஷ்பிக்கும். பங்குனிசித்திரை மாதம் இவ்வாறு செய்யலாம்.

மாதுளைவேண்டியசந்தாநேயர்கள் சென்ற மாதப்பத்திரிகையில்வைபழம் இருப்பதாய் எழுதியிருக்கும் நிருப நேயருக்கு எழுதி வரவழைக்கலாம்.

திராட்சை கருப்புதினுசும் வெள்ளை அதாவது பச்சைதினுசும் நமது அனுபோகத்தில் ஒன்றாய்தான் காய்க்கிறது— பெங்களூரில் நல்லதினுசுகள் கிடைக்கும். கோயமுத்தூரிலும் விவசாய காலேஜில் நல்ல தினுசு இருக்கிறது. பெங்களூருக்கடுத்த குப்பம், திருப்பத்தூர், வேலூர், திண்டுக்கல்லுக்குஅருகிலுள்ள வெள்ளோடு கிராமம் முதலிய இடங்களிலும் பெனு கொண்டா அனந்தபூர் ஜில்லாவிலும் திராட்சை செடிகள் கிடைக்கும்

நமது ஜெகநாத பாக் தோட்டத்திலும் பச்சை, கருப்பு ஆகிய இருஜாதிச்செடிகளும். இருக்கின்றன தைமாதத்திலும் ஜூலைமாதத்திலும் எழுதினால் கிளைகள் கொடுக்கக்கூடும்.

ப. ர.

மே—ா—ா ஸ்ரீ கிருஷிகன்பத்திராதிபர் அவர்களுக்கு

2063 சந்தாதார் ஆ. கோ. குப்புசாமி ரெட்டியார் எழுதிய கடிதம் தங்கள்மேன்மையான உபகாரத்திற்கு வந்தனம், என்னுடைய சில சந்தேகங்களை கேட்க ஆசைப்படுகிறேன். அதாவது என் நன்செய் நிலமானது சுமார் 5 எக்கர் விஸ்தீரணம் உள்ளது. அதில் ஆவணி புரட்டாசி மாதங்களில் சம்பா நட்டால் நன்றாக சுமாராக இருக்கிறது. அறுவடையான பிறகு சேர் உணராமல் கார்பயிர் சாகுபடி செய்ய உழுதால் சுமார் 25 தினத்திற்குள் உழுது நட்டாலும் பயிர் கொஞ்சம் கிளைத்து (அல்லது) சிவந்து பயிர் ஆகிறது. அதற்கு இங்குள்ளவர்கள் கொஞ்சம் சேர்பிகிய வைத்து ஜலம் இறைத்தால் பயிர் இளைக்காது என்கிறார்கள், அதற்கு பூமியின் குணம் அடியில் சுண்ணாம்பு கெட்டி உள்ள நிலம் என்று சொல்லுகிறார்கள். அதற்கு சிவந்த மண் மணல் சரியாக கொஞ்சம் அரைக் காணிக்கு 200 வண்டியாவது அடித்தால் பயிர் இளைக்காது என்கிறார்கள். பூமியை நன்றாக உலரவைத்து சித்திரை மாதத்தில் உழுது சொர்ணவாரி நடவு நட்டால் சேர் 20 நாள் ஆனாலும் அல்லது 15 நாளில் சேற்றை அதிகமாக 10 சால்வரையில் ஓட்டி நட்டாலும் பயிர் இளைத்து கரைந்து போகிறது ஆனி மாதத்தில் 10 நாளில் உழவுசெய்து சொர்ணவாரி நடவுநட்டால் ஆடி மாதத்தில் மழைபெய்தால் பயிர் இளைக்காமல் நன்றாக மாகுல் கொடுக்கிறது. ஷை நிலத்தில் சம்பா அறுவடைக்குப் பிறகு சொர்ணவாரி நடவு சேர் உணராமல் உழுது நட்டால் பயிர் பச்சை கட்டி திரும்புவதற்குள் கதிர் வந்து மாகுல் சுவல்பமாகக் கிடைக்கிறது. ஷை நிலத்திற்கு தங்கள்

உத்தேசத்தை அறிய ஆவலுள்ளவனாக இருக்கிறேன், கிணற்று ஜலத்தின் குணம், ஜலம் துவர் உள்ளது என்கிறார்கள், பயிருக்கு இறைத்தால் ஜலம் பாய்ச்சக் கூடிய முதமடையில் சமார் 20-30 செண்டு நிலத்திலுள்ள பயிர் அதிகமாக வளர்ந்து மாசூல் கொஞ்சமாகவும் பதர் அதிகமாகவும் போகிறது.

பூமிக்கு உணவுகொடுத்து பயிர் செய்து ஏரிஜலம் பாய்ந்தால் பயிர்கள் நூகவளர்ந்து மாசூல் அதிகமாகவும் பூமி பூராவும் ஒரேமாதிரியாகவும் இருக்கிறது.

பூமிக்கு உணவு கொடுத்து பயிர் செய்து இறைப்பு இறைத்தால் பயிர் வளர்ந்து பதர் அதிகரித்து சாகுபடி செய்த கழனியில மூன்றில் ஒருபங்கு அதிகமாக வளர்ந்து சாசி கட்டாமல் போகின்றது.

பூமிக்கு உணவு போடாமல்சாகுபடி செய்து இறைப்பு இறைத்தால்பாதி பயிர் சுமாராகவும், பாதிப் பயிர் கடைமடையில் இளப்பமாகவும் போகிறது.

நாற்றுஇளசாக நடவுநட்டால்இறைப்புவரும் காலத்துஉயரமாகவளர்ந்து விழுந்து சேதமாகிறது. நாற்றுமுற்றவைத்து நடவுநட்டால்இறைப்புவந்தால் முதமடையில் பாதி பயிர் கிளைப்புகள் விட்டு துளிர்த்துக் கொண்டும் கதிர் வாங்கிக்கொண்டும் பழுத்துக் கொண்டும்—பச்சென்றும் பயிராகவும் கதிராகவும் துளிர்ப்பாகவும் விளைச்சலாகவும் இருக்கிறது. கடைமடையில் இளப்பமாக பயிர் ஒரே விதமாக விளைந்து விடுகிறது.

இந்த நிலத்திற்கு பாய்ச்சலுள்ள ஏரியானது முதல் போகத்திற்கே சில சமயங்களில்தான் அதாவது அதிக மழை காலங்களில்தான் ஒரு போகத்துக்கு ஜலம் வரும். அதுவும் சிலசமயங்களில் மழை கம்மியானால் ஏரிக்கு ஜலம் வருவது கஷ்டம். அந்த சந்தர்ப்பங்களில் பூமிக்கு உணவு போடுவதற்கும் பயம். போடாததற்கும் பயம், இப்படி உள்ள நிலத்திற்கும் ஜலத்திற்கும் தங்கள் அபிப்பிராயம் தெரிவிப்பீர்கள் என நம்புகிறேன்.

இவ்விடம் சிலர்பூமிநாங்கு அதாவது ஓர்வித நாக்குப் பூச்சியாக இருக்கலாம் என்று சொல்லுகிறார்கள்.

அந்த பூமியானது என்ன உழவு செய்து நட்டாலும் ஒருவேளை பூமிகொஞ்சம் ஜலம் குறைவானால் எவ்வளவு இறைத்தபோதிலும் ஜலம் நிற்பதுகிடையாது. அதற்கு தங்கள் அபிப்பிராயம்தெரிவிப்பீர்என்றுஎதிர்நோக்குகிறேன்.

கபிலை அடிக்கும் மாடுகளுக்கு கொள் நல்லதா அல்லது கேழ்வரகு கூழ் நல்லதா அல்லது பிண்ணாக்கு நல்லதா இவைகளில் ஒருஜதை மாட்டுக்கு எது எவ்வளவு போடவேண்டும் என்பதை தாங்கள் தெரிவிப்பீர்களாக.

மணிலாகொட்டை புண்ணாக்குதான் இவ்விடம் அகப்படும். அவை மாடுகளுக்கு அவ்வளவு சிலாக்கியமில்லை என்பதாகச் சொல்லுகிறார்கள் தங்கள் விண்ணப்பத்தை எதிர்பார்க்கும்.

ஆ. தோ. குப்புசாமி ரெட்டியார்.

## பதில்

நிருபரேயருடைய நிலத்தையும் அவர் கிணற்றுத் தண்ணீரையும் ரசாயன கூறுபாட்டிற்குக் கோயம்புத்தூரிலிருக்கும் ரசாயனசாஸ்திரிக்கு அனுப்பி அவர் அபிப்பிராயம் தெரிந்து பயிர் செய்தல் நலமென்பது எமது அபிப்பிராயம் இதற்குக் கொடுக்கவேண்டிய பீஸ் என்னவென்று அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

நிருபரேயர் குறிக்கும் பாவனையிலிருந்து பொதுவாய் அந்நிலத்தில் தான்ய சத்துகம்மியாயிருக்கலாமென்று யூகிக்க இடம் கொடுக்கிறது. இத்துடன் சுண்ணாம்புகளர் சம்பந்தமிருக்கிறதென்றும் எண்ண வேண்டியிருக்கிறது. ஒருவருஷம் நிருபரேயரை ஒரு அந்தர் அதாவது 112 இராத்தல் எலும்பு உரமாவது அல்லது சூப்பர்பாஸ்பேட் அதில் பாதியாவது தனி எருவுடன் கலந்து இரண்டாம் போகத்திற்கு போட்டுப்பார்த்து அனுபவம் தெரிவித்தால் நலம். செம்மண் அடித்தால் நலம்தான், ஆனால் மடையடியில் போடாமல் பயிர் எங்கு இறைப்பு காலத்தில் நன்றாய் வரவில்லையோ அப்பாகத்தில் போடலாம்— சேர் உணராயிருக்கும்போது உழுது கார்பயிர் செய்தால் சிவந்து போகிறதென்பதை யுத்தேசித்து அந்நிலம் சுண்ணாம்பு கட்டு களர் சம்பந்தப்பட்டதென்று எண்ணவேண்டியிருக்கிறது. சித்திரைமாதத்தில் சுவர்ணவாரி நம்நாளில் தழை தயாரித்து வைத்திருந்து அத்தழையைபலே சாய்மிதித்து அசன்மேல் நாற்று நட்டால் களர் மேலே போகவிடாமல் செய்யும். பயிர்சற்று முற்றினபின் இப்பாதைஜாஸ்தி கெடுதி செய்யமாட்டாது என்பது எமது அபிப்பிராயம். ஏனென்றால் ஆனிமாதத்தில் செய்யும் பயிரில் ஆடிமாதம் மழைகளினால் உப்புக்களர கரைந்து கீழே போகவோ அல்லது வெளியோடிப் போகவோ இடமிருக்கிறது. சுவர்ணவாரி தினிசுக்கு வெயில்காலம் தான் தக்கபட்டம். மற்ற காலங்களில் பயிர் செய்தால் தக்க மாசூல் கிடைக்காது.

நாங்கு அல்லது நாக்கு பூச்சியினால் பயிர்கள் கெடுகிறதாக அபிப்பிராயப்படுவது தப்பெண்ணமென்பது எமது அபிப்பிராயம். அவைகளினால் நன்மையே பெரும்பான்மையில் கிருஷிகர் அடைவதுண்டு.

ஜலம் நிலத்திலே நிற்க வேண்டுமென்ற அபிப்பிராயம் நல்லதல்ல. நெல் பயிருக்கு ஜலம்பாய்ச்சி அது சுவர்ந்து போகிறதே நலம். ஆனால் ஈரம் இருந்து கொண்டிருக்கவேண்டும்.

மாடுகளுக்கு கொள்ளிலிருக்கும் சத்து வேறு தானியத்திலில்லை என்பது எமது கருத்து. மணிலாக்கொட்டை பிண்ணாக்கு கால் நடைகளுக்குக் கெடுதியுண்டாக்குகிறதென்பது தப்பு அபிப்பிராயம்

நமது அனுபோகத்தில் அது கெடுதி விளைவித்திருப்பதில்லை இதைஊறப்போட்டாவது அல்லது வேகவைத்தாவது கொடுக்கலாம். நாள் 1க்கு மாடு 1க்கு இரண்டு இராத்தல்வரை மாட்டின் திடத்துக்கும் அளவுக்கும் தக்கபடி உபயோகிக்கலாம்.

டி. ர.

க்ஷேமம் ஐயா. கிருஷிகன் பத்திராசிரியரவர்கள் சமூகத்திற்கு

2159 நீர் சந்தாதார் மிகவும் வணக்கமாய் யெழுதிக்கொண்ட விருபம்
உபயக்ஷேமங்களுக்ரும் பகவான் கிருபை கிருஷிகன் வால்யம் 10 பிரதி 12
பக்கம் 291ல் சாகுபடிக்கு லாயக்கானதும் ஜாஸ்தி மாகுல் கொடுக்கக்கூடிய
யதும் (நெம்பர். 247) கரும்பென்று தெரிவதால் ஷை கரும்பை பக்குவமாக
பகவான் கிருபையை முன்னிட்டு பயிர்செய்து பார்க்க விரும்பி ஷை விதைக்
கரும்பு கரணைகள் வரவழைத்துக் கொடுக்கும்படி திண்டுக்கல் ஸ்ரீமான் டிமா
ன்ஸ்ட்ரேட்டரவர்களிடம் சிபார்சு செய்திருக்கிறேன்—ஷை கரும்பு நடவே
ண்டிய நிலம் பக்குவப்படுத்தும் முறையும், கரணைகள் நடவேண்டிய விஸ்
திரணமும், எத்தனை நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சல் களைவெ
ட்டு நடத்தவேண்டும், எந்தெந்த சந்தர்ப்பங்களில் என்னென்ன உர
ங்கள் எவ்வளவு வைக்கவேண்டும்? ஷை கரும்புபட்டம் வெட்டிக்கட்ட வேண்டிய
காலம் வெட்டி ஆலை ஆடலாய்க்கான காலம் எப்பொழுதென்றும் சரியான
முழுவிபரங்களும் கிருபைகூர்ந்து யெனக்குத்தெளிவாய்த்தெரிவிக்கவேணு
மாய்க் கோருகிறேன். பதிலுக்காக ஒரு அணாஸ்டாம்பும் அனுப்பியிருக்கிறேன்
பிழை இருப்பின் பொருத்தருளப் பிரார்த்திக்கிறேன்—

எஸ், நாரயணசாமி ரெட்டி

பதில்

விதைக்கரும்புக்காக கணுக்கள் தருவிக்கும்போது கணுக்களிலுள்ள
முளைகள் சேதமடையாமல் வரஏற்பாடு செய்தாலொழிய அக்கணுக்கள் சரி
யானபடி முளைக்காது. ஆகையால முதல்வருஷம் கொஞ்சம் முளைக்கரு
ம்புகளாகவே வைக்கோல் பிரிசுத்தி அதன்மேல் கோணியாவது ஓலைப்பாயா
வது போட்டு கட்டிவைத்து பார்சலில் வரவழைத்து அவைகளை கணுக்களாய்
வெட்டிமுளைக்கவைத்து அப்பயிரிலிருந்து கிடைக்கும் கரும்புகளிலிருந்து கணுக்கள்
வெட்டியுடனே நட்டு பயிரிட்டால் நஷ்டம் சம்பவிக்கமாட்டாது ஆகையால்
இவ்விஷயத்தில் மெதுவிருபநேயர் கவனம்செலுத்துவாரென்று நம்புகிறோம்.

கரும்பு நட வேண்டியநிலத்தை நன்றாய் உழுது தக்கபடி ஏகரொன்று
க்கு 6000 முதல் 7000 ஆடுவரை கிடைமறித்துமறுபடியும் உழுது 4 அடிமுதல்
5 அடி தூரத்துக்கு ஒருபாராய்போட்டு வைக்கவேண்டும். பார்கள் அல்லது கிடை
ங்குகள் அடி ஆழம் 1 அடி அகலமிருக்கவேண்டும், அப்படி எடுக்கிறபார்களின்
அடிகெட்டியாயிருக்காமல் கொஞ்சம் கொத்தி காயவைக்கவேண்டும், இப்
பார்கள் கிழ்மேலாய்போடுவதுநலம். ஏனென்றால் சூரியவெளிச்சம் சரியான
படி ஓடயிடமிருக்கும். பார்கள்முடிவில் தென்வடலாய்த் தண்ணீர்வடியக்கூடி
யதாய் ஒருவடிகாலும் அமைக்கவேண்டும். இதன் ஆழம் கால்களின் ஆழ
த்தைவிட ஜாஸ்தியாய் இருக்கவேண்டும். சித்திரை வைகாசிமாதங்களில்பெ
ய்யும் கோடைமழைகள் ஜாஸ்தியாய்விட்டால் கரும்பு இளம் பருவத்தில் கெட்
டுப் போகாமல் தண்ணீர்வடியவைக்க இது உபகாரப்படும். நிலம்வடிகால்

வசதி அமைந்த தாபி நக்கவேண்டியது மெத்த அவசியம். ஏகர்ஒன்றுக்கு 8000 கருணைகள்போதும் ஒவ்வொரு சாவிலும் ஜலம்விட்டு சோக்கிஒரு கருணைக்கும் மற்றொருகருணைக்கும் சாண் அளவ இடம் விட்டு நடவேண்டும். கருணைகள் புதைக்கும்போது முளைக்கண்கள் பக்கவாட்டாகயிருக்கும்படியாயும் ஜாஸ்தி ஆழத்தில் புதைபடாமலும் கருணைகளின் மேல்பாப்பு சற்று மேலே தெரியும்படியாயும் புதைக்கவேண்டும். கொழுந்தாடைகளை சாய்பாய் நுனி மேல்பக்கமும் சடிச்த பாகம் அடிப்பக்கமாயும் நடவேண்டும். 3ம்நாள் உயிர் தண்ணீர் லேசாய்கட்டிவடிய விடவேண்டும். நடுவது மார்ச்சு ஏப்பிரல்மாதங்களில் சுத்திரிக்கு மூன்றுநாள்நட்டு சித்திரி அதாவது அக்கினி நட்சாத்து காலங்களில் இளம்பயிராக இருக்கவேண்டும். தண்ணீர் வாரத்துக்கு இரண்டொரு முறைக்குக குறையாமல் பாய்ச்சலாம். ஆனல் இதுமண் வயணத்தைப் பொருக்கும். நட்ட ஒரு மாசத்திற்கு எல்லாம் சிறுகுச்சிகளால் களை எடுத்து ஒவ்வொரு மூட்டிற்கும் கொஞ்சம் முத்துக்கொட்டை பண்ணுக்குபொடி செய்துவைத்து கொஞ்சம்மண் மூடிஉடனே தண்ணீர் பாய்ச்சவேண்டும் அந்நாளிலிருந்து ஒரு மாதமான உடனமறுபடியும்சிறு களைக்கொட்டுகளால் களைவெட்டி மறுபடியும் கொஞ்சம் பிண்ணாக்கு வைத்துமண் அணைத்துஜலம்பாய்ச்சவேண்டும். ஒருமாதம் கழிந்து மண்வெட்டிகளால் களை மறுபடியும் வெட்டி. புண்ணாக்கு அல்லது கொழுஞ்சி ஆவரைமுதலியதழைகளைபயிருக்கு இருபுறமும் வைத்து மண்ணணைத்து கரும்புஇருக்கு கால்களை முகடுகளாகவும் இரண்டுவரிசைகளுக்கு மத்தியிலிருக்குமிடத்தை தண்ணீர்காலாகவும்செய்து தண்ணீர் இறைத்துக் கொண்டு வரவேண்டும். இப்படிப் பக்குவம் செய்தால் கரும்புநன்றாய் பக்கமிட்டு வெடித்து மூடுகட்டிவளரும். நட்டது முதல் 12வது மாதம்வெட்டி ஆட்டலாயக்காகும். ஜாவா 247 கொஞ்சம்முன்னமே ஆலைக்குலாயக்காய் வந்தாலும் வரலாம். அனேகமாய் சித்திரைக்கு பின்னிருந்து ஆலையாட்டும் பக்குவமாகும்

ப. ர.

ஐயா, கிருஷிகன் பத்திரிகாசிரியர் அவர்களுக்கு

எங்கள்கிராமம், அர்க்கோணம்தாலுக்காவின்கீழ் ...தி என்ற கிராமம் இருக்கிறது. எங்கள்பிர்க்கா டிமான்ஸ்ட்ரேட்டர்வர்கள் சித்திரக்காலி விதை 2ம் பட்டத்துக்கு அதிக நன்றாய்வருமென்று சொன்னதின் பேரில் 12ரூபாய்க்கு அவரிடமிருந்து விதையை வரவழைத்து நாத்துவிட்டும், சிலகழனிகளில் விதைத்தும் பார்த்ததில் நாத்துகளில் சில இடங்களில் முளைத்தும் சில இடங்களில் முளைக்காமலும் இருந்தது. நன்றாய்முளைத்த நாத்துகளைப் பிடுங்கி நடவு போட்டோம். 10 நாளைக்குப் பின் 1 ஏ.ருக்கு மணிலாப்புண்ணாக்கு தூள்செய்து போட்டோம்: உளவு காலத்திலும் இதில்களையும் எருவும்போட்டோம். அந்த சித்திரக்காலி நட்டதுளை 2ம்பாரா தீய்ந்து எரிந்துபோயிற்று. விதைத்ததுளையில் முளைத்தபயிர்கள் செகப்புநிறமாகிவந்து எரிந்துபோயிற்று: ஷை திணுசு

விவசாயடிமான்ஸ் டிரேட்டர்ஷாத்தையைக் கேட்டு பயிர்செய்ததில் சுமார் 50ரூபாய் நஷ்டமானதோடு மாமூலாய்க் கிடைக்கும் மாசூலும் இல்லாமல் போய்விட்டது; இப்போது நிலங்களை மறுபடியும் உழுது வெள்ளமண்ணைக் கொண்டு விதைத்திருக்கிறேன், பின் ஜலக்குறைவு காலம். கடவுள் எப்படிச் செய்வாரோ! அதிகம்பட்டதிற்கு சித்தினால் காலிசரியாய் வருமா? அல்லது கிராமத்திற்கும் ஜலசித்தினைக் கொடுக்கும்படியா? அல்லது என் அதிர்ஷ்டமா! தாங்கள் சந்தேகத்தைத் தெளிவிக்கச் செய்யலாமா! டிமான்ஸ்டிரேட்டர் வந்து பார்த்து யாதொரு பதிலும் சொல்லாமல் போய்விட்டார்கள்.

கே. பார்த்தசாரதி ஐயங்கார்

பதில்

எமது அனுபோகத்தில் சித்திரைக்காலி நெல் வெயில்காலத்தில் பயிரிட்டு அனுபோகமிருக்கிறதே தவிர மழைகாலத்தில் பயிரிட்ட அனுபவமில்லை. இத்தினிசப் பயிருக்கு வெயில்நன்றாய் அடித்துக்கொண்டிருக்க வேண்டும்.

நிருபர் குறிக்குமிடம் களர் சம்மந்தப் பட்டதாயிருக்க வேண்டுமென்று யூகிக்க இடமிருக்கிறது. என்னென்றால் அப்பேர்ப்பட்ட ஸ்தலங்களில் தான்பயிர் சரியானபடி முளைக்கிறதில்லை. சிட்டுசிட்டாய் களர்சம்பவிக்கும் ஸ்தலங்களில்பயிர் வராமலும்மற்றநல்ல இடங்களில் பயிர்முளைக்கவும் செய்யும். பயிர்கள்செந்நிறமாய் மாரிப்போவதும்இப்பேர்ப்பட்டகளர சம்மந்தமான இடங்களில்தான்.

வெள்ளமண்கொண்டுதட்ட வேண்டுமென்பதாவும் சரிதான். களர்சம்மந்தமான இடங்களில் பூமியின் கீழுள்ள உப்புகள் தண்ணீரில்கரைந்து சூரிய வெப்பத்தால்அத்தண்ணீராவியாய் போனதும் அதிலிருந்த உப்புமேல்மட்டத்தில் படிந்துபயிர்களின்வேர்களுக்குக்கெடுதிசெய்யும். அநேக பயிர் விளையாமலும் மடிந்து போகும்படியும் சிவந்துபோகும்படியும் நேர்வதுண்டு. ஆகையால்சிலர் பயிர் விதைத்தவுடன் அப்பேர்ப்பட்ட வயல்களில் வாகுல்வைக்கோல் முதலியவைகளை லேசாய்மேலே தெளித்து மூடிவைப்பதுண்டு இப்படிச்செய்வதால் உப்புமேலே படியாத வண்ணம்பயிர் கெடுவதில்லை. வேர்கள் முற்றமுற்ற உப்பின் பாதகத்தை ஜாஸ்திசட்டை செய்யாமல் வளரக்கூடும். இம்மாதிரி ஒரு சிறுபாகத்தில் செய்துபார்த்து பலனிருந்தால் அவ்வழக்கம் கையாடலாம்

ப. ர.

காலஞ்சென்ற எமது தாயார் லக்ஷ்மியம்மாள்

எங்கள் தாயாரவர்கள் 1929ம் வருஷம் மார்ச்சு மீ 11வ திங்கட்கிழமை இரவு வைகுண்ட பிராப்தியடைந்ததால் இப்பத்திரிகை சிறிது தாமதப்பட்டு வெளியாயிற்று

ப. ர.